# 22 கதை சொல்லுதலை ஒழுங்கு செய்தலும் பயிற்சி செய்தலும்

**இலக்கு**

*மாணவர்கள் தங்கள் வாய்வழி கதைசொல்லும் திறன்களை ஏற்பாடு செய்யவும் முன்னேற்றவும் மதிநுட்பங்களையும் முறையான முன்னூட்டற் குறிப்புகளையும் பெற்றுக்கொள்கின்றனர். இப்பயிற்சி (இது பல தடவைகள் மீளச் செய்யவேண்டியது) முதல்மொழியில் அவர்களுடைய வாய்வழி வெளிப்பாட்டுத் தகைமையினைத் தழைத்தோங்கச் செய்வதுடன், அவர்களுடைய சொல் தொடரியல் திறமையினை மேம்பாடடையச் செய்யப் பங்களிக்கிறது.*

தரம் 2 - 6

20 - 45 மணித்துளிகள்

**நடைமுறை:**

- ஆசிரியர் மாணவர்களுக்கு ஒரு சிறுகதை சொல்கிறார். அவர் தன்னுடைய கதைசொல்லும் முன்னூட்டற் குறிப்புகளை வலியுறுத்தி நடைமுறைப் படுத்துவதிலேயே குறிப்பான கண்காணிப்பினைச் செலுத்துகிறார் (அடுத்த பக்கத்தைப் பார்க்கவும்). (மாற்றுவழி: ஆசிரியர் முதலில் கதையைச் சலிப்பான மாறுதலில்லாத குரலிலும் பின்னர் உற்சாகமூட்டும் தெளிவான முறையிலும் சொல்லுவார்).
- மாணவர்கள் கண்காணிப்புடன் கேட்கின்றனர். தொடரும் கலந்துரையாடல் கேட்பவர்கள் விருப்பினைக் கவரும்படி தெளிவான கவர்ச்சியான முறையில் ஒரு கதையை எவ்வாறு சொல்லலாம் என்பதையொட்டியே நடைபெறும். இவ்வாறு செய்யும்போது, தனிப்பட்ட குறிப்புகள் செயன்முறைத் தேர்வுகளுக்கு உட்படுத்தவேண்டும்.
- கூட்டாக, குறிப்புகளை "தெளிவாகக் கதை சொல்ல முன்னூட்டற் குறிப்புகள்" (எடுத்துக்காட்டு: கீழே பார்க்கவும்) என ஒரு பட்டியல் வடிவமாக அமைக்கப்படும்.
- செயன்முறைப் பயன்பாட்டுக்கு (பின்னர் வரும் பாடத்தில்) மாணவர்கள் மேலே கூறப்பட்ட முன்னூட்டற் குறிப்புகளை உற்றுநோக்கி வழங்கவுள்ள ஒரு கதையை அல்லது பேச்சுக்கதையைக் கற்பனை பண்ணுகிறார்கள். (மாற்று: இருவராக, அது உரையாடலுக்கு இடங்கொடுக்கும்) பார்க்கவும் #23 (ஒவ்வொருநாட் கதைகள்), #24 (தன்கதை சொல்லுதல்), #25 (ஆக்கமுறை விவரிப்பு).
- ஒரு சுருக்கமான எழுத்து ஏற்பாடாக கதையின் அடிப்படைக் கருத்தைக் குறிக்கும் திறவுச்சொற்களை எழுதுவதும் பயனுடையதாயிருக்கும். யாராவது விரும்பினால் முழுக் கதையினையும் எழுதலாம். அந்த எழுத்துருவினை அடுத்துவரும் பயிற்சிக்கு அடிக்கல்லாகப் பயன்படுத்தலாம்.
- மொழி தொடர்பான வினாக்களும் சிக்கல்களும் ஆசிரியரின் துணையுடன் கலந்துரையாடப்பட்டுத் தெளிவாக்கப்படும். ஆசிரியரும் பல்வேறு வகையான வாக்கியத் தொடக்கங்கள், முதலியனவற்றுக்கு நல்ல எடுத்துக்காட்டுகளை வழங்குவார்.
- மாணவர்கள் இப்பொழுது கதை சொல்லும் பயிற்சியினை மேற்கொள்வர். இதற்காக, அவர்கள் தம் மனத்திலே நிலைநிறுத்த ஒவ்வொருவரும் இரண்டு அல்லது மூன்று முன்னூட்டற் குறிப்புகளைத் தேர்ந்தெடுப்பர்.
- ஒவ்வொரு பிள்ளையும் இரண்டு மூன்று முறை கதை சொல்லுவதைப் பயிற்சி செய்தபின், அவர் கதை சொல்வதற்கு ஒரு பங்காளியைத் தேடுவர். பெறுகின்ற பின்னூட்டல் எடுத்துரைப்பினை மேலும் முன்னேற்றுதற்கு பங்களிக்கும்.
- நிறைவு எடுத்துரைப்பு முழுவகுப்புக்கு முன்னால் அல்லது சமதரக் குழுவுக்கிடையே நடைபெறும். ஏனைய மாணவர்கள் கண்காணிப்புடன் கேட்டு, முன்னூட்டற் குறிப்புகளைப் பின்பற்றுவதை அடிப்படையாகக் கொண்டு விமர்சனப் பின்னூட்டல் செய்வர்.
- மொழி தொடர்பான பண்புகளும் கலந்துரையாடலிலே கட்டாயம் ஒரு பகுதியாக அமையவேண்டும். முதல் மொழியில் என்ன கடினமாக இருந்தது? எதை (எப்படி) நாம் மேலும் கூடியதாகக் கற்கவேண்டும்?

**குறிப்புகள்:**

- இந்தப் பயிற்சி இயல்பற்ற முறையில் கற்போருக்கும் முதல்மொழியில் குறைந்த தகைமை உடையோருக்கும் மிகுந்த சாவாலுடையதாயிருக்கும். இவ்வாறான வேளைகளில் ஆசிரியர் அல்லது நன்கு மேம்பட்ட மொழித் திறன்களையுடைய ஒரு மாணவர் கட்டாயம் பக்கத்துணை வழங்கவேண்டும். எவ்வாறாயினும், இத்தகைய பயிற்சிகள் குறிப்பாக குறைவான மாணவர்களுக்கு தகவல் நிறைந்தன மற்றும் துணைசெய்வன, எனவே எப்படியாயினும் ஏமாற்றமடையும் பட்டறிவுகளைத் தவிர்த்தே ஆகவேண்டும்.
- கதைசொல்வதில் கூடிய ஊக்கத்தினைப் பிறப்பிப்பதற்கு, வகுப்பு அல்லது குழு உரைத்தல்களைப் பதிவுசெய்யவும் அவற்றை இறுவட்டுகளிலும் அல்லது MP3 கோப்புகளிலும் பெறத் தக்கதாக அமைக்கவும் தீர்மானிக்கலாம். மேலும், ஒரு பொதுக் கருப்பொருள் தேர்ந்தெடுக்கப்பட்டால் (எ.கா. தாய் நாட்டிலிருந்து விடுமுறை அனுபவங்கள்), கருப்பொருளடிப்படையிலான ஒத்திசைவுள்ள கவர்ச்சியுள்ள ஒலித்திரட்டாக அமையலாம்.



- இதையும் பார்க்கவும் #10 ("உரையாடலுக்கு ஏற்பாடு செய்தல்") இது தொடர்பாடல் சூழல்களில் அதே நோக்குகளைப் பின்பற்றுகிறது, அத்துடன் #25(ஆக்கமுறையில் விளக்குதல்), #29 (உரத்துப் படிக்கப் பயிற்சிசெய்தல்) மற்றும் #30 (ஏற்பாடு செய்தலும் எடுத்துரைப்பும்).

---

## உரைத்தலுக்கான குறிப்புகள்

- உங்களை எல்லோரும் விளங்கிக்கொள்ள உரத்தும் தெளிவாகவும் பேசுக!
- உங்கள் குரலை சந்தர்பத்திற்கு ஏற்ப திட்டமிட்டதாகப் பயன்படுத்துக: உரத்தும் மென்மையாகவும், தெருட்டுதலாக, நட்பாக, துயரமாக, மகிழ்வாக…
- உங்கள் முகப் புலப்பாட்டையும் உடல் அசைவுகளையும் பயன்படுத்துக: சினத்துடனான, களைப்படைந்த அல்லது மகிழ்ச்சியான முகங்காட்டல், செயற்பாட்டுக்குப் பொருத்தமான உடல்மொழியைப் பயன்படுத்துக.
- உங்கள் அவையோருடன் எப்பொழுதுமே விழித் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளவும், அதனுடன் இடையிடையே அவையோரிடம் ஒரு வினாவை தொடுக்கவும்.
- உங்கள் கதையில் வரும் ஆட்கள் விலங்குகள் பற்றி துல்லியமாகவும் தெளிவாகவும் விளக்குக. அவற்றின் தோற்றங்கள் எப்படி உள்ளன? அவை எத்தகைய கருத்துப்பதிவை ஏற்படுத்துகின்றன?
- உங்கள் கதையில் வரும் செயற்பாட்டு இடங்கள் பற்றி துல்லியமாகவும் தெளிவாகவும் விளக்குக. நீங்கள் என்ன காண்கிறீர்கள், என்ன கேட்கிறீர்கள், முகர்கிறீர்கள், சுற்றுக்சூழல் எப்படிப்பட்டது?

III